**Kanton Zürich**
**Bildungsdirektion**
**Volksschulamt**

# ஆரம்பப்பாடசாலையிலிருந்து மேல்நிலைப்பள்ளிக்கு (செக்குண்டார்) செல்லுதல்

## பெற்றோர்களுக்கான தகவல்கள்

உங்கள் பிள்ளை ஆறாம் வகுப்புக்கு பிறகு ஆரம்பப்பாடசாலையிலிருந்து செக்குண்டார்பாடசாலைக்கு (கட்டாயபாடசாலை) அல்லது கிம்னாசியத்திற்கு செல்லும். உங்கள் பிள்ளையினது பாடசாலைப் பயணத்தில் மிக முக்கியமான இந்த படியானது ஆறாம் வகுப்பில் மிகவும் கவனமாக தயார்ப்படுத்தப்பட்டு, பொறுப்பான ஆசிரியர்களுடன் சேர்ந்து திட்டமிடப்பட்டு முடிவெடுக்கப்படுகின்றது.

## சூரிச் மாநில கட்டாயப்பாடசாலையினது தோற்றம



## செக்குண்டார் பாடசாலை (கட்டாயப்பாடசாலை)

செக்குண்டார்பாடசாலையில் கெமைண்டெயைப் பொறுத்து இரண்டு(யுஇடீ) அல்லது மூன்று(யுஇடீஇஊ) பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பிரிவு யு ஆனது பிள்ளையிடமிருந்து மிகக்கூடுதலான கற்கும் திறமையை எதிர்பார்க்கின்றது. உங்கள் பிள்ளை எந்தப்பிரிவுக்கு செல்லும் என்பதை வகுப்பாசிரியர் பெற்றோராகிய உங்களுடன் பெற்றோருக்கான கலந்துரையாடல் மூலம் ஒன்றாக கதைத்து முடிவு செய்வார். உங்கள் பிள்ளையினது ஒட்டுமொத்த மதிப்பீட்டு அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்படும். அதாவது பாடசாலையில் உங்கள் பிள்ளையின் திறமைகள், கற்றல், வேலை திறன்கள், சமூகத்துடனான நடத்தைகள் மற்றும் வளர்ச்சிநிலைகள் போன்றன இதில் அடங்கும். வகுப்பு பிரித்தலில் வகுப்பாசிரியருடனும் பாடசாலை நிர்வாகத்துடனும் உங்களுக்கு உடன்பாடு இல்லை எனின் இதனை செக்குண்டார்பாடசாலைக்கு பொறுப்பான பாடசாலை உயர் நிர்வாகம் தீர்மானிக்கும். பிள்ளைகளின் வெவ்வேறுபட்ட திறமைகளுக்கேற்றவாறு செக்குண்டார் பாடசாலையானது கணிதம், ஜேர்மன், பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் ஆகிய நான்கு பாடங்களிலிருந்து ஆகக்கூடியது மூன்று பாடங்களில் மூன்று மேலதிக பிரிவுளாக(ஐஇ ஐஐஇ ஐஐஐ) பிரிக்க முடியும். கெமைண்டெ மேலதிக பிரிவுளாக பிரிக்கின்றதா என்பதைப் பற்றி பாடசாலை உயர் நிர்வாகமானது முடிவெடுக்கும். பிரிவு ஐ ஆனது பிள்ளையிடமிருந்து மிகக்கூடுதலான கற்கும் திறமையை எதிர்பார்க்கின்றது. உங்கள் பிள்ளையினது திறமையைக் கருத்தில் கொண்டு கணிதம், ஜேர்மன், பிரெஞ்சு ∴ஆங்கிலம் ஆகிய பாடங்களில் மூன்று மேலதிக பிரிவுகளிலிரிருந்து ஒன்றிற்கு பிரிக்கப்படுவர். உங்கள் பிள்ளையினது கற்றல் வளர்ச்சி, முன்னேற்றம் என்பவற்றைப் பொறுத்து வேறு பிரிவுக்கு(யுஇடீஇஊ) அல்லது மேலதிக பிரிவுக்கு(ஐஇ ஐஐஇ ஐஐஐ) மாறுவதற்கு சாத்தியங்கள் உண்டு. முதலாவது செக்குண்டார் வகுப்பில் கார்த்திகை மாத முடிவில் அல்லது சித்திரை நடுப்பகுதியில் அல்லது வகுப்பு முடிவில் இவை இடம்பெறும். தொடர்ந்து வரும் வகுப்பில் தை மாத முடிவில் அல்லது வகுப்பு முடிவில் இவை இடம்பெறும். ஆசிரியர் இது போன்ற மாற்றத்திற்கு விண்ணப்பம் செய்வார். பெற்றோராகிய நீங்களும் இது போன்ற மாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியும். ஆசிரியர் பெற்றோராகிய உங்களுடன் கலந்தாலோசித்து மாற்றத்திற்கான முடிவை எடுப்பர், ஆனால் கருத்த வேறுபாடுகளிருப்பின் பாடசாலை உயர் நிர்வாகம் இதை தீர்மானிக்கும்.

செக்குண்டார் பாடசாலைக்கு செல்வதற்கான வகுப்பு பிரித்தலை
திட்டமிட்டு மிகக்கவனமாக தயார்ப்படுத்தி முடிவெடுக்கப்படுகின்றது.

ஆரம்பப்பாடசாலையி-னது ஆறாம் வகு-ப்பின் முதலாவது அல்லது இரண்டாவது கால்பகுதியில

1. ஆரம்பப்பாடசாலையினது ஆறாம் வகுப்பின் முதலாவது அல்லது இரண்டாவது கால்பகுதியில் பாடசாலையானது பெற்றோருக்கு செக்குண்டார் பாடசாலையின் அமைப்பு மற்றும் பிரிவுகள் (A,B,C) அதிலுள்ள மேலதிக பிரிவுகள் (I, II, III) பற்றி தெரிவிக்கும்.

மாசி நடுப்பகுதியில்

2. மாசி நடுப்பகுதியில்
வகுப்பாசிரியர் உங்கள் பிள்ளையினது எதிர்கால பாடசாலைப்பயணம் பற்றி பெற்றோருடனான கலந்துரையாடலை ஆரம்பிப்பார்.

பங்குனி இறுதி வரை

3. பங்குனி இறுதி வரை
ஆசிரியர் பிள்ளையினது வகுப்பு மாற்றம் மற்றும் வகுப்பு பிரித்தல் பற்றிய பரிந்துரைகளை பெற்றோருக்கு பிள்ளையின் முன்னிலையில் தெரிவிப்பார். அனைவருக்கும் சம்மதமாயின் வகுப்புப்பிரித்தல்∴மாற்றுதல் செல்லுபடியானதாகும். இது அதிகாரப்பூர்வமாக கடிதம் மூலம் தெரிவிக்கப்படும்.

சித்திரை மாதம்

4. சித்திரை மாதம்
முடிவில் சம்மதம் இல்லையாயின் வகுப்பாசிரியர், பாடசாலை அதிபர் மற்றும் செக்குண்பார் பாடசாலையின் ஒரு ஆசிரியர் ஆகியோருடன் பெற்றோருடனான கலந்துரையாடல் இரண்டாவது தடவை இடம்பெறும். அனைவருக்கும் சம்மதமாயின் வகுப்புப்பிரித்தல்∴மாற்றுதல் செல்லுபடியானதாகும். இது அதிகாரப்பூர்வமாக கடிதம் மூலம் தெரிவிக்கப்படும். இம் முடிவிலும் சம்மதம் இல்லையாயின் ஆவணங்கள் இறுதி முடிவிற்காக செக்குண்டார் பாடசாலையின் நகரசபை நிர்வாகத்திற்கு (ஞஉாரடிகடநபந) அனுப்பி வைக்கப்படும்.

வைகாசி ஆனி மாதம்

5. வைகாசி ஆனி மாதம்
சட்டப்படி கேட்கும் உரிமையை வழங்கிய பின்பு நகரசபை நிர்வாகம் (Schulpflege) முடிவெடுக்கும்.

இதிலும் கருத்து வேறுபாடுகள் இருப்பின் பெற்றோர் மேன் முறையீடு செய்யலாம்.

## கிம்னாசியம் (மத்தியகல்லூரி)

உங்கள் பிள்ளை மிகவும் திறமை வாய்ந்த மாணவ மாணவியாயின் ஆறாம் வகுப்பின் இறுதியில் கிம்னாசியம் அல்லது ஒரு மத்திய கல்லூரியில் சேரலாம். நீங்கள் உங்கள் பிள்ளையை மாசி மாதம் 10ம் திகதிக்கு முன்பு (கலை.்.விளையாட்டு கிம்னாசியமாயின் தை மாதம் 15ம் திகதி) நீங்கள் தெரிவு செய்யும் கிம்னாசியத்திற்கு பதிவு செய்தல் வேண்டும். உங்கள் பிள்ளை ஐந்துவகையான மத்துாராக்களில் (Maturitätsprofile) ஒன்றை தீர்மானிக்கும். இதற்கான நுளைவுத் தேர்வில் சித்தியடைந்தோரே அனுமதியினை பெற்றுக்கொள்வார்கள். அரச ஆரம்பப் பாடசாலையின் வகுப்பு புள்ளிகளும் (Erfahrungsnoten) கணக்கில் எடுக்கப்படும். மாணவ மாணவியருக்கு ஆறாம் வகுப்பின் ஜேர்மன் மற்றும் கணித பாடங்களின் சராசரி புள்ளியானது ஆரம்பப் பாடசாலையின் வகுப்பு புள்ளிகளாக (Erfahrungsnoten) கணக்கில் எடுக்கப்படும். சூரிச்சின் ஆரம்பப்பாடசாலையில் ஆறாம் வகுப்பிலிருந்து பரீட்சைத்திகதி வரை கற்றவற்றை கொண்டு உங்கள் பிள்ளையினது அறிவு மற்றும் திறமைகள் பரீட்சிக்கப்படும்.

## பெற்றோர் எவ்வாறு தகவல் பெற்றுக்கொள்ள முடியும்?

பெற்றோராகிய நீங்கள் எப்போதும் முதலாவதாக உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரை தொடர்பு கொள்ளுங்கள். பள்ளிகெமைண்டெ இற்கென (Schulgemeinden) இணையத்தளம் உள்ளது. பாட-சாலையின் இணையத்தளமானது உங்களுக்கு பல தகவல்களை தாயார்செய்து வைத்துள்ளது.

## செக்குண்டார் பாடசாலை விபரம்

கல்வி அலுவலகம் மற்றும் கட்டாயப்பாடசாலை அலுவலகத்தினது இணையத்தளங்களில்:

www.zh.ch/volksschule → Sekundarschule
www.zh.ch/bildungsdirektion

விசேட முன்னேற்ற உதவி பற்றிய தகவல்களிற்கு:

www.zh.ch/volksschule → Besonderer Bildungsbedarf

### கிம்னாசியம் செல்லுதல்

மத்திய கல்லூரிகள் தொழில் கல்வி அலுவலக இணையத்தளங்களில் ஐஐஐ.ணாா.

www.zh.ch/mba

குறிப்பாக இங்கு நீங்கள் சூரிச் மாநிலத்திலுள்ள அனைத்து கிம்னாசியங்களினதும் வலயத்தளங்கள் மற்றும் பதிவு செய்தல் மற்றும் ஏனைய மத்தியகல்லூரிகள் பற்றிய தகவல்களைக் காணலாம்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பதிவு செய்வதற்கான தகவல்களை நீங்கள் இங்கே காணலாம்:

www.zentraleaufnahmepruefung.ch